**சார்பு நீதிமன்றம், மேட்டுப்பாளையம்.**

**முன்னிலை : திரு.K.பழனிவேல், பி.எல்.,**

**சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ஆம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண். 126/2019**

***TNCB 19000-454-2019***

திரு. ஈஸ்வரன் **....வாதி**

**//எதிர்//**

திருமதி. சங்கீதா **.... பிரதிவாதி**

இவ்வழக்கு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 23.02.2026 அன்று விசாரணைக்கு வந்து, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. P. ராஜேந்திரன், அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. P. ரமேஷ்பாபு, அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

***தீர்ப்புரை***

இவ்வழக்கானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 1 – ன் கீழ் ரூ. 9,06,000/-ஐ ஆண்டொன்றுக்கு 6% வட்டியுடன் திரும்ப செலுத்த பிரதிவாதிக்கு உத்தரவிட கோரியும், வழக்கின் செலவுத் தொகை கோரியும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

***02. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்:-***

பிரதிவாதி அவரது வீட்டிற்கான கட்டுமான செலவுகளுக்காக கடந்த 20.02.2018 அன்று வாதிக்கு கடனுறுதி சீட்டு இயற்றிக் கொடுத்து ரூ. 7,50,000/- க்கு ஆண்டுக்கு 12%

வீதம் வட்டி செலுத்த ஒப்புக்கொண்டு கடன் பெற்றுள்ளார். மேலும், மேற்கண்ட கடன் தொகையில் வட்டியையோ, அசலையையோ பிரதிவாதி செலுத்த முன் வரவில்லை. இந்நிலையில், பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை 3ம் தரப்பினருக்கு விற்பனை செய்ய முயற்சி செய்து வருகிறார். மேலும், பிரதிவாதி வாதியிடம் பெற்ற கடன் தொகையில் அசல் மற்றும் வட்டியை செலுத்தாமல் நிலுவையில் வைத்திருந்ததால் அசல் மற்றும் வட்டி சேர்ந்து மொத்தமாக ரூ. 9,06,000/-ஐ பிரதிவாதி வாதிக்கு வழங்க உத்தரவிட வேண்டும்.

## *03. <u>பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>*

வாதி வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் முற்றிலும் உண்மைக்கு மாறானவை. உண்மையில் பிரதிவாதிக்கு வீடு கட்டி தந்தது சம்பந்தமாக ஒரு பிரபாகரன் என்பவருக்கும் பிரதிவாதிக்கும் ஏற்பட்ட பிரச்சனையில் ரூ. 13,00,000/-ஐ பிரதிவாதி, பிரபாகரன் என்பவருக்கு செலுத்த வேண்டும் என கோரி வழக்கறிவிப்பு ஒன்றை கடந்த 14.01.2019 அன்று வாதியின் வழக்கறிஞர் மூலம் அனுப்பினார். அதற்கு பிரதிவாதி கடந்த 28.01.2019 அன்று பதிலறிவிப்பு ஒன்றினை அனுப்பினார். மேலும், வாதியும், பிரபாகரனும் நெருங்கிய உறவினர்கள் என்பதால் வாதி பிரபாகரனுடன் சேர்ந்து போலியான கடனுறுதி சீட்டினை இயற்றி அதில் பிரதிவாதியின் கையெழுத்து போன்றே கையெழுத்து இட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். உண்மையில் பிரதிவாதி வாதியிடம் எந்த கடனும் பெறவில்லை. எனவே, வாதியின் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

## *4. <u>இவ்வழக்கில் வனையப்பட்டுள்ள எழுவினாக்கள் கீழ்க்கண்டவாறு</u>*

| | |
|---|---|
| *1)* | *Whether the suit pronote is valid, true and binding on the Defendant?* |
| *2)* | *Whether the Plaintiff is entitled for the relief of recovery of money from Defendant?* |
| 3) | *To what other relief?* |

05. இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ 4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. நீதிமன்ற தரப்பு சாட்சியாக தடய அறிவியல் ஆய்வகத்தில் பணிபுரியும் திருமதி சுபா என்பவர் நீ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். நீதிமன்ற தரப்பு சான்றாவணமாக நீ.ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

***06). எழுவினா (அ) மற்றும் (ஆ) – விற்கான விவாதமும் , தீர்வும் :-***

***Whether the suit pronote is valid, true and binding on the Defendant?***
***Whether the Plaintiff is entitled for the relief of recovery of money from Defendant?***

வாதியின் வழக்கு என்னவென்றால் பிரதிவாதி அவரது வீட்டிற்கான கட்டுமான செலவுகளுக்காக கடந்த 20.02.2018 அன்று வாதிக்கு கடனுறுதி சீட்டு இயற்றிக் கொடுத்து ரூ. 7,50,000/- க்கு ஆண்டுக்கு 12% வீதம் வட்டி செலுத்த ஒப்புக்கொண்டு கடன் பெற்றுக்கொண்டு மேற்கண்ட கடன் தொகையை செலுத்தாமல் நிலுவையில் வைத்துள்ளதால் கடன் தொகையை வட்டியுடன் செலுத்தக் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

07). பிரதிவாதியின் வழக்கு என்னவென்றால், பிரதிவாதி வாதியிடம் எந்த விதமான கடன் தொகையையும் பெறவில்லை என்றும் வாதி பிரபாகரன் என்பவருடன் சேர்ந்து பிரதிவாதியின் கையொப்பத்தை போன்றே போலியாக இட்டு ஒரு கடனுறுதி சீட்டை இயற்றி தற்போது பொய்யான காரணத்துடன் வழக்கை தாக்கல் செய்துள்ளதால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

08). மேற்கண்ட வாதி தரப்பு வழக்கை வாதி முதல் நோக்கில் **இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 101 (பாரதிய சாக்ஷ்ய அதிநியம் சட்டம் பிரிவு 104) படி** நிரூபிக்க வேண்டியது வாதியின் கடமையாகும். மேற்கண்ட வாதியின் வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்று பரிசீலனை செய்கையில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்கண்ட வா.சா.1 ஈஸ்வரன் தனது சாட்சியத்தில் பிரதிவாதி அவரது வீட்டிற்கான கட்டுமான செலவுகளுக்காக கடந்த 20.02.2018 அன்று வாதிக்கு கடனுறுதி சீட்டு இயற்றிக் கொடுத்து ரூ. 7,50,000/- க்கு ஆண்டுக்கு 12% வீதம் வட்டி செலுத்த ஒப்புக்கொண்டு கடனுறுதி சீட்டு இயற்றி கொடுத்து கடன் பெற்றதாக சொல்லும் அந்த சங்கதியை நிரூபிக்கும் வகையில் 20.12.2018 தேதியிட்ட கடனுறுதி சீட்டை தாக்கல் செய்துள்ளார். அந்த கடனுறுதி சீட்டு வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வாதியிடம் பெற்ற கடன் தொகையை பிரதிவாதி திரும்ப செலுத்தாததால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

09). மேற்கண்ட சங்கதியை நிரூபிக்கும் வகையில் வாதி தரப்பில் வா.சா.ஆ 1 கடனுறுதி சீட்டை எழுதிய திரு. கார்த்திக் என்பவர் வா.சா.2 ஆகவும் மேற்கண்ட கடனுறுதி சீட்டில் சாட்சி கையொப்பம் இட்ட திரு. கிருஷ்ணசாமி என்பவர் வா.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மேற்கண்ட வா.சா.2 மற்றும் வா.சா. 3 ஆகியோர்கள் தங்களுடைய சாட்சியத்தில் வாதியிடம் பிரதிவாதி வீடு கட்டுவதற்காக கடன் பெற்றதாகவும், அதற்காக கடனுறுதி சீட்டு இயற்றி கொடுத்துள்ளதாகவும் அந்த கடனுறுதி சீட்டை வா.சா.2 இயற்றியதாகவும் அதில் வா.சா.3 சாட்சி கையொப்பம் இட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்கள்.

10). இந்நிலையில், பிரதிவாதி தரப்பில் வாதியிடம் பிரதிவாதி எவ்வித கடன் தொகையும் பெறவில்லை என்றும் அதற்கு ஈடாக எவ்வித கடனுறுதி சீட்டும் வாதிக்கு

இயற்றி கொடுக்கவில்லை என்றும் மேற்கண்ட கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து இல்லை என்றும் அதை வாதி போலியாக கையொப்பம் இட்டு இயற்றி பொய்யான காரணத்துடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்து மேற்கண்ட சங்கதியை நிரூபணம் செய்யும் வகையில் பிரதிவாதி பி.வா.சா. 1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

11). மேலும், நமது மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் ***2023(1) MWN (Civil) 708*** என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளது.

***In the High court of Madras***
***2023(1) MWN (Civil) 708***

Aandroose. 2.C. Sivaramasankaran 3. M.Kannan … Appellant

**--vs--**

C.L. Theodar and 5 others … Respondents

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மேற்கண்ட தீர்ப்புரையில், வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணமானது வழக்கிற்காக போலியாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றும் அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்றும் தெரிவிக்கும் நபரே அந்த சங்கதியை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அவரையே சார்ந்ததாகும் என்று தெளிவுப்படுத்தியுள்ளது.

12). இந்த வழக்கில் வாதி தரப்பில் பிரதிவாதி வாதியிடம் கடன் பெற்றதையும் அதற்காக கடனுறுதி சீட்டு இயற்றி கொடுத்த சங்கதியையும் வா.சா 2 மற்றும் வா.சா.3 மற்றும் வா.சா.ஆ. 1 ன் மூலம் வெளிப்படுத்தியுள்ள நிலையில், அதை மறுக்கும் பிரதிவாதி வாதியின் வழக்கினை பொய்ப்பித்து தனது வழக்கான வாதியிடம் கடன் தொகை எதுவும் பெறவில்லை என்பதையும் அதற்காக கடனுறுதி சீட்டு இயற்றி கொடுக்கவில்லை

என்பதையும் வா.சா.ஆ 1 கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்பதையும் அது வாதியால் போலியாக இடப்பட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்த சங்கதியைப் பொறுத்து நிரூபிக்க வேண்டிய பொறுப்பு பிரதிவாதியின் கடமையாகும்.

13). மேற்கண்ட பிரதிவாதி தனது தரப்பு வழக்கினை நிரூபணம் செய்ய பிரதிவாதி பி.வா.சா. 1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்கண்ட பி.வா.சா.1 தனது சாட்சியத்தில் பிரதிவாதிக்கு வீடு கட்டி தந்தது சம்பந்தமாக ஒரு பிரபாகரன் என்பவருக்கும் தனக்கும் ஏற்பட்ட பிரச்சனையில் ரூ. 13,00,000/-ஐ தான், பிரபாகரன் என்பவருக்கு செலுத்த வேண்டும் என கோரி வழக்கறிவிப்பு ஒன்றை கடந்த 14.01.2019 அன்று வாதியின் வழக்கறிஞர் மூலம் அனுப்பியதாகவும் அதற்கு தான் கடந்த 28.01.2019 அன்று பதிலறிவிப்பு ஒன்றினை அனுப்பியதாகவும் மேலும், வாதியும், பிரபாகரனும் நெருங்கிய உறவினர்கள் என்பதால் வாதி பிரபாகரனுடன் சேர்ந்து போலியான கடனுறுதி சீட்டினை இயற்றி அதில் தன்னுடைய கையெழுத்து போன்றே போலியான கையெழுத்து இட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

14). மேற்கண்ட கண்ட சங்கதியை நிரூபணம் செய்யும் வகையில், வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்பதை நிரூபணம் செய்ய வா.சா.ஆ. 1 கடனுறுதி சீட்டினை தடயஅறிவியல் ஆய்வத்திற்கு அனுப்பி வைப்பதற்காக மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டு, பின்னிட்டு பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்ட கையொப்பம் அடங்கிய 2015 முதல் 2018 வரையிலான கூடுதல் ஆவணங்கள் கேட்டு அனுப்பப்பட்ட நிலையில், சர்ச்சைக்குரிய மேற்கண்ட வா.சா.ஆ. 1 கடனுறுதி சீட்டு மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆவணங்களில் உள்ள கையொப்பங்களை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பட்ட நிலையில்,

மேற்கண்ட வா.சா. ஆ. 1 ல் கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து அல்ல என்று அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட அறிக்கையினை நிரூபணம் செய்யும் வகையில் தடய அறிவியல் ஆய்வகத்தில் பணிபுரியும் திருமதி. சுபா என்பவர் நீ.மா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் மேற்கண்ட அறிக்கை நீ.ம.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

15). மேற்கண்ட நீ.ம.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 10.10.2023 ம் தேதியன்று கேட்கப்பட்ட கூடுதல் ஆவணங்களுடன் இணைத்து வழக்குத்துறையில் பெறப்பட்டு ஆவண எண். 221/2023 வழங்கப்பட்டதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கையொப்பங்களுக்கு A1 முதல் A16 வரை குறியீடு கொடுக்கப்பட்டதாகவும் சர்ச்சைக்குரிய கையொப்பத்திற்கு Q என்ற குறியீடு கொடுக்கப்பட்டதாகவும் கைப்பெருக்கி மற்றும் வீடியோ ஸ்பெக்ட்ரம் காம்போ நெட்டர் ஆகிய கருவிகளை கொண்டு ஒப்பீடு ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும் மேலும் கையொப்பங்களை பெரிதாக்கி புகைப்படங்கள் எடுத்து ஒப்பீடு ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் A1 முதல் A16 முடிய உள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட கையொப்பங்களை எழுதிய நபர் சர்ச்சைக்குரிய கையொப்பமான Q எழுதவில்லையென அறிக்கை வழங்கியதாக கருத்துரை தெரிவித்துள்ளார். மேற்கண்ட நீ.ம.சா.1 னை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்திருந்த போதிலும், மேற்கண்ட நீ.ம.சா.1 சாட்சியத்தை எவ்வகையிலும் விலக்கும் வகையில் இல்லை. எனவே, வா.சா.ஆ 1 கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் அல்ல என்றும் மேற்கண்ட கடனுறுதி சீட்டினை வாதிக்கு பிரதிவாதி இயற்றி கொடுக்கவில்லை என்பதும் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் மேற்கண்ட கடனுறுதி சீட்டானது போலியாக இயற்றப்பட்டது என்பதும், மேற்கண்ட கடனறுதி சீட்டு பிரதிவாதியை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாதது என்பதால் வாதி

கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது அல்ல என எழுவினா 1 மற்றும் 2 ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

***16). எழுவினா (இ) – விற்கான விவாதமும் , தீர்வும் :-***

***To what other relief?***

வழக்கின் தரப்பினருக்கு கிடைக்கக்கூடிய பரிகாரங்கள் குறித்து தெளிவாக தீர்வு காணப்பட்டுள்ளதால் வேறு எந்த பரிகாரங்களும் வழக்கின் தரப்பினருக்கு கிடைக்கத்தக்கதல்லவென்று எழுவினா - (3) - ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

***17). இறுதியாக,***

**இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.**

**செலவுத்தொகை இல்லை.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதனை, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு, மார்ச் திங்கள் 18 ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/- K. பழனிவேல்,

சார்பு நீதிபதி,

மேட்டுப்பாளையம்.

**1). வாதி தரப்பு சாட்சிகள் பட்டியல் :-**

| **வ. எண்** | **சாட்சி பெயர்** | **சாட்சிய வரிசை** |
|---|---|---|
| 1). | திரு. ஈஸ்வரன் | வா.சா.1 |
| 2). | திரு. கார்த்திக் | வா.சா.2 |
| 3). | திரு. கிருஷ்ணசாமி | வா.சா.3 |

**2). வாதி தரப்பு சான்றாவணங்கள் பட்டியல் : -**

| வ. எண் | தேதி | சான்றாவண விபரம் | ஆவண வரிசை | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|---|
| 1). | --- | கடனுறுதி சீட்டு | வா.சா.ஆ.1 | அசல் |
| 2). | --- | தான செட்டில்மெண்ட் ஆவணம் | வா.சா.ஆ.2 | நகல் |
| 3). | --- | வாதியின் ஆதார் அடையாள அட்டை | வா.சா.ஆ 3 | நகல் |
| 4). | --- | கிருஷ்ணசாமி என்பவரின் ஆதார் அடையாள அட்டை | வா.சா.ஆ 4 | நகல் |
| 5). | – | வங்கி கணக்கு விபரம் | வா.சா.ஆ 5 | நகல் |

**3). பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் பட்டியல்**

| வ. எண் | சாட்சி பெயர் | சாட்சிய வரிசை |
|---|---|---|
| 1 | திருமதி. சங்கீதா | பி.வா.சா 1 |

**4). பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் பட்டியல் :-**

| வ.எண் | தேதி | சான்றாவணங்கள் | ஆவண வரிசை | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|---|
| 1 | --- | வழக்கறிவிப்பு | பி.வா.சா ஆ.1 | அசல் |
| 2 | --- | பதிலறிவிப்பு | பி.வா.சா ஆ.2 | அசல் |
| 3 | --- | அஞ்சல் ஒப்புகை அட்டை | பி.வா.சா ஆ.3 | அசல் |
| 4 | --- | திருப்பப்பட்ட அஞ்சல் உறை | பி.வா.சா ஆ.4 | அசல் |

**3). நீதிமன்ற தரப்பு சாட்சி**

| வ. எண் | சாட்சி பெயர் | சாட்சிய வரிசை |
|---|---|---|
| 1 | திருமதி. சுபா | நீ.மா.சா 1 |

**4). நீதிமன்ற தரப்பு சான்றாவணம் பட்டியல் :-**

| வ.எண் | தேதி | சான்றாவணங்கள் | ஆவண வரிசை | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|---|
| 1 | --- | தடய அறிவியல் ஆய்வறிக்கை | நீ.ம.சா. ஆ.1 | அசல் |

**Sd/- K. பழனிவேல்,**
சார்பு நீதிபதி,
மேட்டுப்பாளையம்.

*அ.வ.எண். 126/20219*
*18.03.2026*
*சீரான தீர்ப்புரை*